வேலை இல்லாத் திண்டாட்டம் விஷமென பரவுகிறது!

ஆட்சியாளர் போக்கு அல்லலை அதிகப்படுத்துகிறது

தொழில் முதலாளிகள் வீண் தொல்லை கொடுக்கின்றனர்

—(o)—

இளைஞர்களிடையே ஊக்கம் குறைகிறது; நம்பிக்கை நாசமாகிறது

Phone No 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர் C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (23—6—50) வெளியீடு (24—6—50) [இதழ் 286

மதுரை சிறையில் தடியடிப்பிரயோகம்

—(o)—

பலருக்குப் படுகாயம்; ஒருவர் மாண்டார்

—(...)—

சில கைதிகள் உண்ணாவிரதமிருக்க முயன்றதன் விளைவு

சென்னை, ஜூன். 21—

மதுரை சிறையில் சிறை அதிகாரிகள் கைதிகள் மீது தடியடிப்பிரயோகம் செய்ததன் விளைவாக எட்டு பேர் காயமடைந்தனர். ஒருவர் மாண்டார்.

இந்த நிகழ்ச்சி 20-ம் தேதி காலை நடைபெற்றது. இதற்குக் காரணம், மதுரை ஹெட் கான்ஸ்டபிள் ஒருவர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக கடந்த 19-ம் தேதி 6 பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதே என்று சர்க்கார் கூறுகிறது.

மதுரை சிறையிலுள்ள சில கைதிகள் காலைக் கஞ்சியைக் குடிக்கவும், சிறை அறைகளுக்குள் செல்லவும் மறுத்தனராம். இதன்பேரில் சிறையதிகாரிகளுக்கும் கைதிகளுக்குமிடையே தகராறு முற்ற ஆரம்பித்தது. நிலைமை சட்டுக்கடங்காமற் போகவே தடியடிப்பிரயோகம் செய்ய நேர்ந்ததென்று சொல்லப்படுகிறது.

தடியடிக்காளான பலரில் திருப்பத்தூரைச் சேர்ந்த இராமநாதன் என்னும் 30 வயதுடைய இளைஞர் ஒருவர் ஆஸ்பத்திரியில் மாண்டார்.

6 பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதையொட்டி சில கைதிகள் உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்ததைத் தடுக்க சிறையதிகாரிகள் முயற்சி செய்ததன் விளைவாகவே இக் கலகம் மூண்டதாகச் சொல்லப்படுகிறது.

நாட்டின் அவலநிலை குறித்து அசோக்மேத்தா விளக்கம்

"நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டே போகிறது. படித்த இளைஞர்கள், வேலை தேடித் திரும் அலுவலகங்களின் வாயிற்படிகளில் காத்துக்கிடக்கின்றனர். இவர்களுடைய நம்பிக்கைகள் நாசமாகின்றன. உருப்படியான பலனும் கிட்டுவதில்லை. பரீட்சையில் தேறிய மாணவர் பலரும் கல்லூரிகளில் இடம் கிடைக்காத காரணத்தால், வேலை தேடி அலைய ஆரம்பித்துவிட்டார்கள்."

பி. டி. ஐ. நிருபருக்கு அளித்த பேட்டியின்போது, ஹிந்து மகதூர் சபாவின் பொதுச்செயலாளர் தோழர் அசோக்மேத்தா மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது:—

"நிரந்தரமான வேலைகிடைப்பது அரிதாகிவிட்டது. அத்துடன் சர்க்கார் கையாளும் ஆள்குறைப்புத் திட்டமும், வேலைகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் முறையும், தனிப்பட்ட ஸ்தாபனங்களின் ஆள் குறைப்புத் திட்டங்களும் சேர்ந்து பல்லாயிரக்கணக்கான தொழிலாளரையும், உத்தியோகஸ்தர்களையும் வேலை இழக்கச் செய்துவிட்டது.

ஏற்கெனவே, இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது. இந்நிலையில் மேலும் வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டைப் பயமுறுத்த ஆரம்பித்துவிட்டது. பொருளாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள குழப்பம் காரணமாக, தொழில் அபிவிருத்தித் திட்டங்கள் பல தடைபட்டுக் கிடக்கின்றன. தொழில் முதலாளிகள் தொழிலபிவிருத்தித் திட்டங்களை வெளியிடக் கூசப்படுகின்றனர். பல ஸ்தாபனங்கள் மூடப்பட்டே விட்டன. வேறு பல ஸ்தாபனங்கள் மூடப்படலாம் என பயமுறுத்தப்படுகிறது. வேறு ஏதேனும் சில ஸ்தாபனங்களில் தொழிலபிவிருத்திக்கு வழிகோலப்படுவதாக இருந்தால், அதுவும் வேலைச்சுமையை அதிகப்படுத்துவதன் மூலமும் வேலையின் அளவைக் கட்டுப்படுத்துவதன் மூலமுமே செய்யப்படுகிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்தில் மிகக் கொடுமையானது, படித்த இளைஞர்கள் வேலையில்லாமல் திண்டாடுவதேயாகும். கற்றறிந்த இளைஞர்கள் பலர், வேலை தேடித் திரும் அலுவலகங்களின் வாயிலில் காத்துக்கிடக்கின்றனர். இப்படிப்பட்டவர்களுக்கு வேலை கிடைக்கும் வழி சொல்லுவதற்கில்லை. அவர்களுடைய நம்பிக்கைகள் நாசமாகின்றன. உருப்படியான பலனையும் அவர்கள் அடைய முடிவதில்லை. ஆள் குறைப்புத் திட்டங்களால், வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டே போகிறது. போதாக்குறைக்குப் படித்துத் தேர்ச்சி பெற்றவர்கள் பல

(2-ம் பக்கம் பார்க்க)

பழைமை நிலைக்குப் பயணம்



உணவுப் பிரச்னையைத் தீர்க்க உணவு அமைச்சர் தோழர் முன்ஷியார் காட்டும் வழி, மக்களைப் பழைய காட்டுமிராண்டிக் காலத்துக்கு அழைத்துச்செல்லத்தக்கதாகவே உள்ளது

—By Courtesy of Shankar's weekly

சர்ச்சிலின் போர்க் குறிப்புகள்

சர்ச்சிலின் யுத்த குறிப்புகளான 'கிராண்ட் அலையன்ஸ்' என்ற புத்தகத்தின் மூன்றாவது வால்யூம் தயாராகிவிட்டது. சர்ச்சிலுக்குச் சொந்தப் பிரதியை, பிரசுரகர்த்தர்கள் அனுப்பியிருக்கின்றனர்.

ஜூலை 20 தேதிக்குப் பிறகே இது விற்பனைக்குக் கிடைக்கும். முந்திய இரண்டு வால்யூம்களைவிட இது அளவில் பெரியதாக இருக்கிறது.

கையெழுத்துப் பிரதியைச் சர்ச்சிலே ஒரு தடவைக்குப் பன்முறை பார்த்து, திருத்தியிருக்கிறார்.

டமாஸ்கஸ் விமான நிலையம்

டமாஸ்கஸ், ஜூன் 21—

டமாஸ்கஸ்ஸுக்கு அருகிலுள்ள அல்மெஸ்ஸா விமான நிலையத்தை பிரெஞ்சு விமானங்கள் உபயோகிக்கலாம் என்று சிரியா சர்க்கார் அனுமதியளித்திருக்கின்றனர்.

புதுடில்லி, ஜூன் 22—

ஹிமாலயமலை மீது ஏறுவதற்காக யு. எஸ். சீநெதி வில்லியம் ஓ. டக்ளஸ் செப்டம்பர் மாதத்தில் இந்தியா வந்து சேருகிறார். அவர் ஒரு மாதம் மலையேறிவிட்டு யுனைடெட் ஸ்டேட்ஸ் திரும்புவார்.

உதவி சிவில் சப்ளை கமிஷனர்களுக்கு அதிக அதிகாரம்

............—)............

சென்னை சர்க்கார் ஏற்பாடு

சென்னை, ஜூன் 22—

மாகாண உணவு ரேஷன் கண்ட்ரோலர் பதவி எடுபட்டதின் விளைவாக உதவி சிவில் சப்ளை கமிஷனர்களின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களை சென்னை சர்க்கார் விஸ்தரித்திருக்கின்றனர்.

1. சிவில் சப்ளை உதவிகமிஷனர் (வடக்கு) தலைமைக் காரியாலயம், சென்னை நகரிலேயே இருக்கும். இவருடைய அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்கள் விசாகப்பட்டினம், கிழக்கு, மேற்கு கோதாவரி, குண்டூர், கிருஷ்ணா, நெல்லூர் ஜில்லாக்கள்.

2. சிவில் சப்ளை உதவி கமிஷனர் (மத்திய சர்க்கார்) தலைமைக் காரியாலயம் சென்னை நகரில் இருக்கும். இவர் ஆதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்கள் அனந்தபூர், பெல்லாரி, கடப்பை கர்நூல், தெற்கு வடக்கு ஆற்காடு, சித்தூர், செங்கற்பட்டு ஜில்லாக்கள்.

3. உதவி சிவில் சப்ளை கமிஷனர் (தெற்கு) தலைமைக் காரியாலயம் திருச்சினாப்பள்ளியில் இருக்கும். இவருடைய ஆதிக்கத்திலுள்ள பிரதேசங்கள் தென் கன்னடம், திருநெல்வேலி, மதுரை ராமநாதபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரி, கோயம்புத்தூர், சேலம், மலையாளம் ஜில்லாக்கள்.

மாலை மணி

சென்னை 23—6—50 வெள்ளிக்கிழமை

அவல நிலை

"பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்" என்பது முதுமொழி.

பஞ்சம் பற்றிப் பிடிக்க வறுமை வாட்ட, பட்டினிப் பட்டாளம் நாளுக்கு நாள் நாட்டில் பெருகிக் கொண்டேயிருக்கிறது.

நமது நாட்டில் மேல் நிலையில் இருப்போர், நடுநிலையில் நிற்போர், தாழ்நிலையில் கிடப்போர் என மூவகைப் பெரும் பிரிவினராக, மக்கள், சமுதாய வாழ்வில் பிரிந்து கிடக்கிறார்கள். மேல் நிலையிலிருப்போரைப் பஞ்சம் மிரட்டுவதில்லை—மிரட்டவும் முடியாது! மாருக, மேல் நிலையில் இருப்போராகிய பணக்காரர்களின் மிரட்டலைக் கண்டுதான், பஞ்சம் பயந்து வளர்ந்து வருகிறது. தாழ்நிலையில் இருக்கும் மிக ஏழைமக்கள் மானம், மரியாதை, கல்வி, முயற்சி, நிலை நினைப்பு முதலிய எதைப் பற்றியும் கவலைப்படாமல், எதைச் செய்தாவது, எப்படிச் செய்தாவது பட்டினியைப் போக்கிக்கொண்டால்போதும் என்று எண்ணி, சற்றுத்துணிச்சலோடு வாழ்க்கை வெளியில் நடமாடி வருபவர்களாவார்கள். மேல்நிலையிலிருப்போரைப் போன்ற கவலையற்ற நிலையிலும் இல்லாமல், மிகத் தாழ்நிலையில் கிடப்போர்க்கு இருக்கும் துணிச்சலும் இல்லாமல், வாழ்வுக்கும் வறுமைக்கும் இடையே கிடந்து உழல்பவர்கள், நடுநிலையில் நிற்கும் நடுத்தர வகுப்பினரேயாவார்கள். சமுதாயத்தில் மிகப் பரிதாபத்திற்குரியவர்களாகக் காட்சியளிப்பவர்கள் இவர்களேதாம!

பணக்காரர்கள் மானத்தை விலைகொடுத்து வாங்கிவிடுவார்கள்; மிகத் தாழ்நிலையில் இருக்கும் வறியவர்களோ மானத்தைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள்; ஆனல் மானமுள்ள வாழ்வைப் பல கஷ்ட நஷ்டங்களுக்கிடையே நடத்திச்செல்ல வேண்டும் என்ற முயற்சியிலே ஈடுபட்டு, பலவித சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கிடையே கிடந்து சீரழிபவர்கள் நடுத்தர வகுப்பினரிலேயும் மிகமிகப் பரிதாபகரமான வாழ்வை நடத்துபவர்கள் அரசாங்க ஊழியர்கள்!

அரசாங்க ஊழியர்கள் என்பவர்கள் குறிப்பிட்ட அளவு உயர்ந்த கல்வி கற்றவர்கள், நாகரிக வாழ்வு தெரிந்தவர்கள், கௌரவ நிலையைக் கொள்பவர்கள், மானம், மரியாதையைக் காப்பாற்ற விரும்புபவர்கள் ஆனலும் பசியாற்றி வாழ வேண்டிய அவசியத்திலுள்ளவர்கள்—அவர்கள் அரசாங்க அடிமை வாழ்வு மட்டுமல்ல, சமுதாயத்திலேயும் சுதந்திரமற்ற அடிமை நிலையிலேயே இருத்தி வைக்கப்படுகிருர்கள். அவர்கள் தரம் உயர்ந்தவர்களானலும், அடிமை வாழ்வு வாழ்வது மட்டுமல்ல, பஞ்சத்தில் அடிப்பட்டு, வறுமையால் வாட்டப்படுபவர்களாக இருக்கும் அவலநிலைதான் மிகப் பரிதாபகரமானதாக இருக்கிறது!

ஒரு குறிப்பிட்ட அளவு வருமானத்திற்குள்ளே காலந் தள்ள வேண்டியிருந்தாலும், அந்தக் குறிப்பிட்ட வருமானமும் தம்மையும் தம்மைச் சார்ந்து நிற்கும் குடும்பமாகிய பட்டினிப்பட்டாளத்தையும் வைத்துக் காப்பாற்றப் போதுமான அளவினதாக இல்லாததாலும், அரசாங்க ஊழியர்களைப் பொறுத்து இந்த அவல நிலை ஏற்பட்டிருக்கிறது.

வாழ்க்கைச் செலவுகள் பன்மடங்கு ஏறிவிட்டன—விலைவாசிகள் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே இருக்கின்றன—குடியிருப்பு இடத்தின் வாடகைக்கொடுத்துத்தாளாத வகையில், கண்ணை மூடிக்கொண்டு உயர்கிறது—போக்குவரத்துச் சாதனச் செலவுகள், துணிமணிச் செலவுகள், இதர வகைகள் அளவின்றி பல மடங்குப் பெரிதாகிவிட்டன—குடும்பத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கையோ ஆண்டுக்காண்டு பெருகிக்கொண்டே இருக்கிறது — இப்படிப்பட்ட சூழ்நிலையில், வருமானமோ "கல்லுப் பிள்ளையார்" மாதிரி அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தால்அரசாங்க ஊழியரின் வாழ்வு என்ன ஆகும்? செலவு வகைகள் எல்லாம் உயர்ந்து விட்டன, ஆனல் வருமானமோ அதேநிலையில்தான் இருக்கிறது என்ருல், எப்படி நாணயமான, ஒழுங்கான, கண்ணியமான நிலையான, கட்டுப்பாடான, மரியாதையான, நிலையான நல்ல நாகரிக வாழ்வை அரசாங்க ஊழியர்கள் நடத்த முடியும்?

மத்திய அரசாங்க ஊழியர்களின் நிலையைவிட, சென்னை மாநில அரசாங்க ஊழியர்களின் நிலை மிகமிக கேடுற்றுக் கிடக்கிறது. மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு ஒருவித சம்பளமுறையும், மாகாண அரசாங்க ஊழியர்களுக்குக் குறைந்த வித சம்பளமுறையும் இருந்துவருகின்றன ஒரே நிலப்பகுதியில் வாழும் ஊழியர்களில், மத்திய அரசாங்கத்தைச் சார்ந்தோர்க்கு ஒருவித சம்பள முறையும், மாநில அரசாங்கத்தைச் சார்ந்தோர்க்கு வேருேர் முறையும் என்ருல், அது எவ்வளவு வெட்கக்கேடான செயல் என்று நினைத்துப் பாருங்கள் காங்கிரஸ் அரசாங்கம் ஒரு கண்ணில் வெண்ணெய்யையும், மற்ருெரு கண்ணில் சுண்ணும்பையும் வைத்துக்கொண்டிருந்தால், இதனை விபரீத விளையாட்டு என்று தானே எக்கொலி கொட்டி நகைக்கத் தோன்றும் எவருக்கும.

விலைவாசிகள் ஏற்றத்துக்கு ஏற்றபடி மந்திரிகள் தங்கள் சம்பளத்தையும், பஞ்சப்படியையும் ஏற்றிக்கொண்டுள்ளார்கள். ஆனல், சென்னை மாநில அரசாங்க ஊழியர்கள்—குறிப்பாக சென்னை அரசாங்கத்தின்தலைமை அலுவலகத்திலுள்ள ஊழியர்கள். எவ்வளவோ கெஞ்சிக்கேட்டும், வாதிட்டுக்கேட்டும், இரங்கிக் கேட்டும், காங்கிரஸ் முறையாகிய வேலைநிறுத்த முறையைக் கையாண்டு கேட்டும் முதலமைச்சரோ, நிதி மந்திரியோ இன்னமும் செவி சாய்த்தபாடில்லை. சென்னை முதலமைச்சரிடமும், நிதி மந்திரியிடமும் அரசாங்க ஊழியர் சங்கத்தினர் தூதுக்குழு அனுப்பி நிலைமையை விளக்கிக் கூறிய பிறகும், அரசாங்கம் கடமையைச் செய்ததாகத் தெரியவில்லை. அரசாங்க ஊழியர்களிடத்தில் ஒழுக்கக்கேடு, நாணயக்கேடு ஏற்படாமல், நல்ல நிலையில் அவர்களை வைத்துக் காப்பாற்றவேண்டியது அரசாங்கத்தின் இன்றியமையாக் கடமையாயிற்றே! அரசாங்க ஊழியர்கள் கேடுற்ருல் அது அரசாங்கத்தையே தாக்குமே! அரசாங்கம் நிலை கவிழ வேண்டி நேரிடுமே! இவற்றையெல்லாம் சென்னை அரசாங்கம் ஏனே சிந்திக்க மறுக்கின்றது?

சென்னை மாநில அரசாங்க ஊழியர்கள், மாடமாளிகைகூட கோபுரங்கள்கட்டி, அம்சதூளிகா மஞ்சத்தில் அமர்ந்து, பெருவாழ்வு வாழ்வதற்காகச் சம்பள உயர்வோ, பஞ்சப்படி உயர்வோ கேட்கவில்லை. ஊசலாடிக்கொண்டிருக்கும் உயிருக்கு உடலில் வாழ்வளிக்கவே சம்பள உயர்வும், பஞ்சப்படி மிகுதியும் கேட்கின்றனர். அவர்கள் அதிகமாகவும் கேட்டுவிடவில்லை, மத்திய அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கும் அளவாவது கொடுத்தருள வேண்டுமெனக் கோரி நிற்கின்றனர். இதைச் செய்ய அரசாங்கம் ஏன் முற்படக்கூடாது?

சென்னை மந்திரிகள், தங்கள் சம்பளங்களை உயர்த்திக்கொள்ள வேண்டுமென்பதிலே எவ்வளவு அக்கரை காட்டினர்களோ அவ்வளவு அக்கரையை சென்னை மாநில அரசாங்க ஊழியர்கள் பொருட்டும் காட்ட முன்வரவேண்டும். அதுதான் நீதி, நேர்மை, முறை, திறமையாகும்.

அரசாங்க ஊழியர்கள் வெறும் "வாயில்லாப் பூச்சிகள்" என்று எண்ணி, ஆட்சி அதிபர்கள் ஆணவ மதில்மேல் வீற்றிருப்பார்களேயாயின், வேகின்ற நெஞ்சங்கள் வெடிமருந்துச் சாலைகளுக்கு ஒப்பாகும் என்பதை நினைவு படுத்திக் கொள்ளட்டும். ஆகவே நீதி வழிநின்று, நேர்மையைக் கடைப்பிடித்து, அறிவை ஆதாரமாகக்கொண்டு, அன்பை முன்னிறுத்தி அமைச்சர்கள் அமைதி காண முயலுவது நல்லது. அரசாங்க ஊழியர்களும் வாழவேண்டிய மனிதர்களேஎன்றஎண்ணம், ஆளவந்தார்கள் உள்ளத்தில் எழுமாக! எழுந்தால், அரசாங்க ஊழியர்களின் அவல நிலை அழியும்! — அவர்களால் எழும்பும் புயலும் அடங்கும், அமைதியும் நிலவும்!

அமெரிக்காவில் சென்னை மேயர்

வாஷிங்டன், ஜூன் 20—

ஜூன் 25-ல் சென்னை மேயர் டாக்டர் பி. வி. செரியன் இங்கு வருவார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இங்குள்ள மருத்துவ தலைவர்களையும், ஜனாதிபதி ட்ரூமனையும் சந்திக்கலாமென்று சொல்லப்படுகிறது.

இதாலிக்கு ஏகாதிபத்ய எண்ணமில்லையாம்

இதாலிய தூதுவர் கூறும் விவரம்

பாக்தாத், ஜூன் 22—

"இதாலிக்கு இனி ஏகாதிபத்ய ஆசை எதுவும் கிடையாது. உலகிலுள்ள மக்கள் சமாதானமாக வாழவேண்டும் என்றே இதாலி விரும்புகிறது" என்று, பாக்தாதில் இதாலியின் ஸ்தானீகராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸினர் அல்போன்ஸா அீரா 'குளோப்' நிருபருக்களித்த விசேஷ பேட்டியில் கூறினர்.

அரபுநாடுகளுடன் இதாலி நெருங்கிய உறவைக்கொண்டாடவே விரும்புகிறது என்றும், லிபியாவின் சுதந்திரத்தை பங்கப்படுத்த அது ஒருநாளும் விரும்பாது என்று, அவர் கூறினர்.

வேலையில்லாத் திண்டாட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்குக் கல்லூரிகளில் இடம் கிடைப்பதில்லை. இதனல், அவர்களும் வேலைதேட ஆரம்பித்துவிடுகின்றனர்.

சாதாரண பயிற்சிபெருத தொழிலாளர் பலர் வேலையின்றி தவிக்கின்றனர். பயிற்சிபெற்ற தொழிலாளருக்கே கிராக்கி அதிகமாக இருக்கிறது.

இங்கிலேயிலேதான், சமதர்மவாதிகள் தரும திட்டங்களை அரசியலார் புறக்கணித்துவிட்டு, அவர்களுடைய ஆள் குறைப்புத் திட்டத்தையும், வேலையின் அளவுக் குறைப்புத் திட்டத்தையும் கடைப்பிடித்து வருகின்ரன. இதனல்உழைப்பாளிகளின் ஊக்கம் ஒடுக்கப்படுகிறது. "இளைஞர்களின் எழுச்சி, அவநம்பிக்கையாக மூடப்படுகிறது" என்று கூறியிருக்கிருர்.

தோழர் அசோக்மேத்தாவின் இந்தப் பேச்சு, நாட்டு நிலையை நன்கு விளக்கிக்காட்டுகிறது. அவர் சுட்டிக்காட்டியிருப்பதுபோல், வேலையில்லாத் திண்டாட்டம் விஷமெனப் பரவிவருகிறது நாட்டில். பாடுபட்டும் பலன்காண முடியாத நிலையிலே, பல்லாயிரக்கணக்கான பாட்டாளி மக்கள் பரதவிப்பது ஒருபுறம் இருக்கும்போது, படித்துப் பலன் காணுமல பரதவிக்கும் மற்ருேர் கூட்டத்தின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது மற்ருேர்புறம். ஆள் குறைப்புத் திட்டத்தின்காரணமாக, வேலையிழந்துவேதனைபடும் கூட்டம் இன்னெரு புறம், என்ற முறையிலேநாட்டிலே வேலையில்லாதோர் பட்டாளம் பெருகிக்கொண்டே வருகிறது.

இப்படிப்பட்ட நிலைமை ஒரு ஜனநாயக ஆட்சியிலே இருப்பது மிகமிக வெட்கக்கேடான விஷயம். அதுமட்டுமல்ல, ஓரளவுக்கு இப்படிப்பட்ட நிலைமையால் நாட்டில் அமைதிக்கு பங்கம நேரிடினும நேரக்கூடும. எனவே, ஆட்சியாளர் இவ்விஷயத்தில் சற்று அதிக கவனம செலுத்த வேண்டும்; வேலையின்மையை எவ்வளவு செவ்வளவுகுறைக்கமுடியுமோ, அவ்வளவுக்கவ்வளவுகுறைக்க முற்படவேண்டும். அதற்கானவழிவகைகளை காணவேண்டும. இவ்வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பது எங்ஙனம் என்பது பற்றி ஆராய ஒரு கமிட்டியை அரசியலார்நிறுவுவது, மிகமிக இன்றியமையாததாகும். இதுதுறையில் முற்போக்கு அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற்று, ஆவன செய்வதும் ஒருநல்ல வழியாகும் என்பதை அரசியலாருக்கு நினைவுறுத்த ஆசைப்படுகிருேம்.

திராவிட மக்களுக்கு வேண்டுகோள்

வாக்காளராக தவறுது பதிந்து கொள்ளவும்

வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை என்ற நியதிப்படி, இரண்டு ஆண்டுகளுக்கு முன் அரசியலார் வாக்காளர் பட்டியல் தயாரித்த போது, அவர்கள் வேலை ஏனே தானே என்றிருந்ததினல் அப்பட்டியலுக்காக செலவிடப்பட்ட பல லட்சக்கணக்கான ரூபாய்கள் பாழ்பட்டுப் போயின, மீண்டும் புதுப்பிப்பதற்கு விடப்பட்டவர்களது பெயர்களை இப்பொழுது பதிவு செய்கிருர்கள். புதுப் பட்டியலில் ஒவ்வொரு திராவிடரும், வயதுவந்த ஆண பெண் அனைவரும். தங்களது பெயர்களை இடம் பெறச் செய்வது மிகவும் அவசியம். நமது வாக்குரிமையைத் தவறுது ஸ்திரப்படுத்திக் கொள்ளுகின்ற முறையில் வருகிற 25-6-50 ஞாயிறன்று பதிவு செய்ய வருகின்ற அதிகாரியிடம் கண்டிப்பாக பதிவு செய்துகொள்ளவும். ஒவ்வொரு மாவட்டத்திலும், இவ்வேலை நடைபெறுகிறது. சென்னை மாவட்டத் தோழர்களுக்கு இதில் கவனம் இருக்கட்டும் என வேண்டிக் கொள்ளுகிறேன்.

கே. கோவிந்தசாமி
செயலாளர்
செ. மா. தி. மு. க.

அணுசக்தி ரகசியம்

அணுசக்தி ரகசியங்களை சாவ ஜாக்கிரதையாக பாதுகாக்கும முறைகளைப் பற்றி பிரிட்டனும், அமெரிக்காவும் கனடாவும விவாதிக்கிறதாக அணுசக்தி கமிஷன இன்று அறிவித்தது.

விவாதம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டதென்பதை அது தெரிவிக்கவில்லை.

தீக்கிரை

கோவில்பட்டி, ஜூன் 20—

கோவில்பட்டி தாலுகாவைச் சேர்ந்த கவணகிரி கிராமத்தில் 73 தம்பப்பட்டுடார் வீடுகள் தீ பிடித்து எரிந்துவிட்டதாக இங்கு தகவல் கிடைத்துள்ளது. சுமார் ரூ 10,000 நஷ்டம என்று சொல்லப்படுகிறது.

ஐ. நா. வில் செஞ்சீனாவுக்கு இடமளிக்க முயற்சி

பிரிட்டன்—இந்தியா ஆலோசனை

லண்டன், ஜுன் 22—

ஐ. நா.-வில் செஞ்சீனா விஷயமாக பிரிட்டன் கடைபிடிக்கும் கொள்கை பற்றி ஜுலை 3-ந் தேதிக்குள் இந்தியாவையும் பாகிஸ்தானையும் பிரிட்டிஷ் சர்க்கார் கலந்தாலோசிப்பர் என்று 'குளோப்' நிருபர் கூறுகிறார்.

செஞ்சீனா ஐ. நா.-வில் பிரதிநிதித்துவம் பெறும் விஷயமாக ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை தீர்க்க வழி கண்டுபிடித்த வண்ணம் பிரிட்டிஷ் சர்க்கார் இருக்கிறது என்று பிரிட்டிஷ் அயல்நாட்டிலாகா அதிகாரி ஒருவர் அறிவித்தார்.

செஞ்சீனா சம்பந்தப்பட்ட விஷயம் ஐ. நா. முன்பு வந்தால் இப்போது வோட் போடாமல் விலகும் கொள்கையை பிரிட்டன் பின் பற்றி வருகிறது. இக்கொள்கையை பிரிட்டன் கைவிடலாம் எனத் தெரிகிறது.

ஜுலை 3-ந் தேதி ஜீனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ. நா. பொருளாதார சமூக பாதுகாப்புக் கௌன்சிலில் பிரிட்டன் செஞ்சீனாவின் பிரதிநிதித்துவத்தை ஆதரிக்கும் பட்சத்தில் இவரை செஞ்சீனாவை ஆதரிக்காத சில நாடுகளும் சேர்ந்து வோட் செய்யும் என எதிர்பார்க்கலாம். இதன் மூலம் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை தீரவும் வழியுண்டு.

செஸ்டர்டன் நாவலிலுள்ளது உண்மை சம்பவமாயிற்று

லண்டன், ஜுன் 22—

பிரபல நாவலாசிரியர் ஜி. கே. செஸ்டர்டன் தன் துப்பறியும் நாவல் ஒன்றில் ஒரு கொலைகாரன் தபால்காரன் போல நடித்து பல சட்டிடங்களில் சந்தேகத்திற்கிடமின்றி நுழைந்து பல கொள்ளை, கொலைகளை செய்ததாக எழுதியிருக்கிறார். அவர் எழுதியது இப்போது லண்டனில் நடந்தேறி விட்டது. ஒருவன் தபால்காரன் போல் உடை அணிந்து தபால் டீபீஸிலிருந்து 135 ரிஜிஸ்டர் தபால்கள் கொண்ட பையை எவரும் சந்தேகிக்காத முறையில் வாங்கிசென்றுவிட்டான். உண்மை தபால் சேவகன் பையை வாங்க வந்தபோதுதான் குட்டு வெளிப்பட்டது.

சினிமாப்பார்த்து சித்தம் சோர்ந்தனர்!

கொலம்பூர் ஜுன் 22—

வாழ்க்கையின் இரகசியம் என்ற 'லெக்ஸ் ஹைஜீன்' சினிமாப் படத்தைப் பார்த்த ஆண்கள் மூர்ச்சித்துவிட்டனர், அவர்கள் மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்க அவசர உதவி அளிக்கப்பட்டது.

சென்ற வாரம் இப்படம் மலேயாவில் காட்ட ஆரம்பிக்கப்பட்டதென்றும் இதுவரை 15000 பேர் அதை பார்த்திருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

'தகப்பனுடைய பாபம்' (வின் ஆப் தி பாதர்) என்கிற மற்றொரு 'செக்ஸ்' படம் மினுக்கிலும் குவாலலம்பூரிலும் காட்டப்படவிருந்தது ஆனால் கடைசி நிமிஷத்தில் நிறுத்தப்பட்டுவிட்டதால் ஏராளமான பேர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். (ருரோய்)

மீண்டுமொரு காமன்வெல்த் மாநாடு

லண்டன், ஜுன் 21—

மற்றொரு காமன்வெல்த் மாநாடு, ஜுலை மாதத்தில் இலங்கையில் நடைபெறவிருக்கிறது. இதில் இந்தியா, பாகிஸ்தான், பிரிட்டன், ஆஸ்டிரேலியா இவைகள்மட்டுமே முக்கிய பங்கை எடுத்துக் கொள்ளும்.

ஸிட்னி மாநாட்டின் முடிவாக எழுந்துள்ள விஷயங்கள், இம்மாநாட்டில் கவனிக்கப்படும்.

இம்மாநாட்டின் முதல் நாளைய கூட்டங்களில் ஹைகமிஷனர்கள் கலந்துகொள்வர். இடைக்கால கூட்டங்களில் அந்தந்த நாடுகளின் அதிகாரிகள் கலந்துகொள்வர்.

இக்கொழும்புமாநாடு செப்டம்பரில் லண்டனில் நடைபெறும் மாநாட்டிற்கு, பூர்வாங்கமானதாகும்.

விவாகரத்துக்குரிய விசித்திர காரணம்

நியூயார்க், ஜுன் 22—

டெட்ராயிட்டைச் சேர்ந்த மார்டின் லார்ஸான் என்பவர் தன் மனைவியுடன் விவாகரத்து கோரி மனுச் செய்துகொண்டிருக்கிறார்.

அவளுடன் வாழ முடியாது என்பதற்கு அவர் கூறும் காரணங்களாவன:— வாரத்திற்கு ஒருவேளை மட்டுமேதான் சமைப்பது, கைச் செலவுக்கு வாராவாரம் 35 பவுன் வேண்டுமென்று கேட்பது, எப்பொழுதும் கட்டித்த கைத்துப்பாக்கியை வைத்துக் கொண்டிருப்பது, அவர்கள் வசிக்கும் இடத்தில் ஒரு குரங்கையும், குளிக்கும் அறையில் ஒரு முதலையையும் வளர்ப்பது. (ருரோய்)

ஆபிரிக்காவில் ரயில்வேக்கள் அமைக்கும் திட்டம்

சாலிஸ்பரி, ஜுன் 21—

தென் ரொடீஷியாவுக்கும், பெச்சுவானாலாண்டுக்குமிடையே புது ரயில்வே பாதை போடுவது குறித்துயோசிக்கப்பட்டு வருகிறது. மத்ய ஆப்பிரிக்காவை துறைமுகங்களுடன் இணைத்து ரயில் போட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

நிர்வாகக்குழு கூட்ட அழைப்பு

25—6—50, ஞாயிறு காலை 10 மணிக்கு, திருச்சி என். எஸ். பங்களாவில் (கருணாநிதி பார்க்) திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகக்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும் அதுபோது கீழ்கண்ட பொருள்பற்றி யோசித்து முடிவு செய்யப்படும். ஆகையால் நிர்வாக உறுப்பினர்கள் தவறாது வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:— 1. பொதுச்செயலாளர், அண்ணாதுரைஅவர்களின் திருச்சி மாவட்ட சுற்றுப்பிரயாணம் 2. கணக்கு வரவு செலவு 3. நமது எதிர்காலவேலை.

இங்ஙனம்
ஜி. பராங்குசம்
துணைச்செயலாளர்

இனி நடப்பவை

சேத்துப்பட்டு:— தி. மு. கழகம் 25—6—50 ஞாயிறு காலை 8 30 மணிக்கு, சென்னை சேத்துப்பட்டு சொக்கநாதபுரம் 2-வது வீதி 37 எண் இல்லத்தில் தி. மு. கழக பொது அங்கத்தினர்கள் கூட்டம் கூடும். அதுசமயம் பல முக்கிய சொஜனங் குறித்து ஆலோசிக்கப்படும்.

• • •

மதுரை:— அண்ணாதுரை இளைஞர் வாசகசாலையின் செயற்குழுக் கூட்டம், 25-6-50 ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறும்.

• • •

தியாகராய நகர், சென்னை:— ஓ. பி. ராமசாமியார் தேசிய வாலிபர் சங்கத்தின் முதலாண்டு விழா, தோழர் கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் 25—6—50 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு நடைபெறும். தோழர்கள் எம். செங்கரரன், இளவழகன் அண்ணாமலை, என். ஜீவரத்தினம், தோழியர் டி. என். குணத்தாளம்மையார் மற்றும் பலர் பேசுவர்.

• • •

வேலூர்பேட்டை:— சுவாமி முத்தப்பமுதலி தெரு, நெ. 15 இல்லத்தில் 25—6—50 காலை 9 மணிக்கு, திரு. குப்புசாமிக்கும், திருமதி ராஜேஸ்வரிக்கும், வல்லை பாலசுப்ரமணியம், பி. ஏ. அவர்கள் தலைமையில், திருமணம் நடைபெறும். தாமரைக்கண்ணி அம்மையார் சொற்பொழிவாற்றுவார் ஒலிபெருக்கி உண்டு. அனைவரும் வருக.

சினிமா படப்பிடிப்பில் புதிய முறை

லண்டன், ஜுன் 22—

நடிகர் நடிகைகள் நேரிலேயே தோன்றுவதுபோல் இயற்கை பருமனையும் காட்டும் மூன்று டைமன்ஷன் படம் எடுப்பது இப்போது சாத்தியமே என்றாலும் அவைகளை காட்டுவதில் வர்த்தக முறையில் லாபமில்லை என்று அஸோஸியேடட் பிரிட்டிஷ் சினிமாக்களின் மானேஜிங் டைரெக்டர் தோழர் ஜே. டி. நட்லேட் கூறுகிறார்.

இவருடைய நிர்வாகத்தில் பிரிட்டனில் மட்டும் 450 சினிமா தியேட்டர்கள் இருக்கின்றன.

அமெரிக்காவில்கூட மூன்று டைமன்ஷன் பிலிம்கள் காட்டும் இயந்திரங்களை தியேட்டர்களில் அமைப்பது லாபகரமானதல்லவென்று அவர் கூறுகிறார்.

சினிமா தியேட்டர்களில் படம் பார்ப்பவர்களுக்கு என்ன வசதியெல்லாம்செய்து தரலாம் என்பதை அறிய இவர் அமெரிக்காபோய்விட்டு வந்திருக்கிறார்.

கெய்ரோ, ஜுன் 22—

ஜினிவாவில் பேச்சுவார்த்தை நடைபெறும் சமாதான கமிஷனிலிருந்து, எகிப்து தன் பிரதிநிதியை வாபஸ்பெற்றதாக வெளியான தகவல் ஆதாரமற்றது என்று, எகிப்திய அதிகாரி ஒருவர் மறுத்திருக்கிறார்.

ஏஜெண்டுகள் தேவை

நமது "மாலைமணி"யை விற்பனைசெய்ய முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் கீழ்க்கண்ட இடங்களுக்கு பொறுப்பு வாய்ந்த ஏஜெண்டுகள் தேவை.

திருச்சி, மதுரை.
மானேஜர்:—"மாலைமணி"

அயருக்குத் தனித் தூதுவர் வேண்டுமாம்

பி.பி. சுப்பாராவுக்கு யோகம் அடிக்கலாம்

கூசூ கரியாகும் படலத்தில் மற்றொரு கட்டம்

டப்ளின், ஜுன். 22—

அயரில் ஸ்தானிகராக தோழர் வி. கே. கிருஷ்ண மேனனை இந்தியா நியமித்திருப்பதில் அயருக்கு திருப்திதான் என்றாலும் டப்ளினிலேயே முழுநேர தூதுவர் ஒருவரை நியமிக்கவேண்டும் என்று அயர் பிரதம மந்திரி தோழர் காஸ்டெல்லோவும் அயல்நாட்டு மந்திரி தோழர் மக்பைடும் இந்திய சர்க்காரிடம் வற்புறுத்தி வந்திருக்கின்றனர்.

இதற்காக பணம் அதிகம் செலவாகும் என்று இந்த யோசனையை மாஜி நிதிமந்திரி டாக்டர் ஜான்மத்தாய் நிராகரித்துவிட்டார்.

இப்பொழுது அயருக்கு தனி ஸ்தானிகர் நியமிக்கவேண்டும் என்ற பிரச்னை டப்ளினிலும் புதுடில்லியிலும் எழுப்பப்பட்டிருக்கிறது.

தனி ஸ்தானிகரை அயரில் நியமிப்பதென்று இந்திய சர்க்கார் முடிவு செய்தால்சென்னை பாரிஸ்டரும் ப்ரீவிகௌன்சிலில் சுமார் 25 ஆண்டு காலம் வக்கீல் தொழில் புரிந்த வருமான தோழர் பி. வி. சுப்பராவ் நியமிக்கப்படலாம்என்று தெரிகிறது.

இந்திய வழக்குகள் இனி ப்ரீவி கௌன்சிலுக்கு அனுப்பப்படமாட்டாது என்ற முடிவு செய்யப்பட்டபின் தோழர் சுப்பராவ் இந்தியாவுக்கு திரும்பிவிட்டார். மேலும் இவர் அயர் தலைநகரில் படித்துத் தேறியவர்.

பிரெஞ்சிந்தியப் பிரச்னை

—

தோழர் ஓ. எம். கிரீன் கருத்து

லண்டன், ஜுன். 22—

பிரெஞ்சிந்தியப்பிரச்னையை இந்திய சர்க்காரும் பிரெஞ்சு சர்க்காரும் நேரிடையில் பேசி தீர்க்கவேண்டும் என்றும் அதுதான் இருசர்க்கார்களுக்கும் கௌரவமளிப்பதாகும் என்றும் பிரபல விமர்சகர் தோழர் ஓ. எம். கிரீன் 'ஸ்காட்ஸ்மன்' பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

ரெபரெண்டம் நடத்த வேண்டிய அவசியமே ஏதுவும் இருக்காது என்று அவர் கூறுகிறார். இப்பிரச்னையால் சர்வதேச நெருக்கடி எதுவும் ஏற்படாதென்றும் சுமுகமாகவே தீர்க்கப்பட்டுவிடலாம் என்றும் அவர் கூறுகிறார்.

பாகிஸ்தான்கோதுமை

கராச்சி, ஜுன் 22—

பாகிஸ்தான் 10,000 டன் மதிப்புள்ள கோதுமையை ஐ. நா. குழந்தைகள் அவசரநிதிக்கு கொடுத்திருக்கிறது. இக் கோதுமையில் ஒரு பகுதி அரபு அகதிகளின் உதவிக்காக பிராட்டிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

இந்தியா-ஈரான் நட்பு உடன்படிக்கை

டெஹ்ரான், ஜுன் 22—

இந்தியாவுக்கும் ஈரானுக்கும் இடையே சமீபத்தில் கையெழுத்தான நட்பு உடன்படிக்கையைத் தொடர்ந்து இருநாட்டின் கலாசார பிணைப்பை அதிகரிக்கவும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று இரானிய பத்திரிகை 'தேஹான்-இ-ஈரான் எழுதியிருக்கிறது.

ஜலவாயு குண்டு உற்பத்தி

—

10 கோடி பவுனுக்கு மேல் செலவாகும்

லண்டன், ஜுன் 22—

இவ்வாரம் பிரஸிடெண்ட் ட்ருமன் காங்கிரஸை 107000 000 பவுன் அனுமதிக்கும்படி கேட்பார் என்றும் இப்பணம் ஜலவாயுகுண்டு உற்பத்திக்காக மட்டுமே உபயோகிக்கப்படும் எனததெரிகிறது.

ஓக் பிரிட்ஜ், லாஸ்அலமஸ் ஹன்ட் போர்ட் ஆகிய இடங்களில் புது அணு உற்பத்திஸ்தலங்கள் ஏற்படுத்தப்படும்.

புது அணு உற்பத்திஸ்தலங்களுக்கு செலவழிப்பதைவிட இருக்கிற அணு சக்திஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்யலாமே என்று சில வட்டாரங்களில் சொல்லப்படுகிறது. ஆனால் ரஷ்யாவுக்கு அணுசக்தி ரகசியம் பற்றி தெரிந்து விட்டதால் அமெரிக்கா ஒருபடி அதிகமாகவே இருந்து ஜலவாயு குண்டு உற்பத்தியால் சிரத்தை காட்ட விரும்புகிறது.

இந்தியர்களிடம் ஸிரிய, லெபனன் மக்கள் அன்பு

கெய்ரோ, ஜுன். 20—

ஸிரிய லெபனான் மக்கள் இந்தியர்களிடம் காட்டும் அன்பைக்கண்டுதான் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாக இந்திய ஸ்தானீகர் தோழர் ஆஸப் அலி அஸ்கார் பைஸி குளோப் நிருபருக்களித்த பேட்டியில் கூறினார்.

ஸிரியாவிலுள்ளவர்கள் அமைதி நிலவவேண்டும் என்ற ஆவலை காட்டுகின்றனர் என்றும் அங்கு அளவுக்கு மீறி அரசியல் கட்சிகள் இருக்கிறதென்றும் பிற்போக்கான அரசியல் வாதிகள் விலகிவிட்டனர் என்றும் அவர் கூறினார்

இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படவேண்டும் என்றே எல்லோரும் விரும்புகின்றனர் என்று அவர் கூறினார். இஸ்ரேல் பிரச்னை அரபு உலகின் முன்புள்ள முக்கியமான பிரச்னையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆசிரியருக்கு முடங்கல்:

இப்படி நடப்பது உண்மையா?

1 சர்க்கார் அச்சகம் மேற்கொள்ள வேண்டிய ஒரு வேலைத் திட்டத்தை 'இந்து' பத்திரிகாலயத்தில் 7½ லட்சம் ரூபாய் செலவில் அச்சிடுமாறு செய்யத் தோழர் வி. சுப்பிரமணிய அய்யர் சிபார்சு செய்தபோது, அதனை மறுத்து அந்த வேலையை சர்க்கார் அச்சகத்தில் வேலைபார்த்துவரும் அதிகாரிகள், சர்க்கார் அச்சகத்திலேயே 3-லட்சம் ரூபாய் செலவில் பூர்த்தி செய்தார்களென்றும், இவ்விடயத்தை இதுவரையில் இப்பார்ப்பன அதிகாரி சர்க்காருக்குத் தெரிவிக்காமலிருக்கிறார் என்பதும் உண்மையா?

2 அநுபவம் வாய்ந்த அதிகாரிகளின்மேல் எந்நேரமும் பல விதமான அக்கப்போர்களைச் சுமத்தி மேல்தரமான வேலை பார்த்துவருபவர்களைக் கீழ்த்தரமானவேலைக்கு ஏன் மாற்றக்கூடாதென்பது போன்ற கேள்விகளைக் கேட்டு அவர்களை மாற்றும் வகையில் சர்க்காருக்குச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது என்பது உண்மையா?

3 சர்க்கார் அச்சகத்தில் லைனோ இயந்திரங்கள் 30 இருக்கின்றன என்பதும், இந்த இயந்திரங்கள் மூலம் முன் இருந்த அதிகாரி (Lepper) ஐகோர்ட் வேலை பூர்த்தி ஆகாமல் நிறுவை ஏற்பட்டதை ஒட்டி, லைனோ டிபார்ட்மெண்டில் அந்த வேலையை ஓவர் டைம்மூலம் பூர்த்தி செய்தார் என்பது உண்மையா? அதனால், பல லட்சம் ரூபாய் சர்க்காருக்கு லாபம் ஏற்பட்டிருக்கிறதென்பதும் உண்மையா? Lino Dept ல் வேலை செய்துவரும் தொழிலாளிகள் கேட்கும் சம்பள கோரிக்கையும், வேலைத் திட்டமும் மேற்கொள்ளப்பட்டால் வேலையை மிக எளிதாகவும், சுருங்கிய நேரத்திலும், மிக்க பணச் சுருக்கம் கொண்டும், செய்துதரலாமென வேலை நுட்பம் தெரிந்த அநுபவம் வாய்ந்த தொழிலாளிகள் இந்த ஆரிய அதிகாரியைப் பேட்டிகண்டு, கலந்து பேசினார்கள் என்பது உண்மையா?

5. சர்க்கார் அச்சகத்தில் வேலை செய்பவரும் தொழிலாளிகளுக்கு வேலையைக் கொடுக்காமல், வெளி அச்சகங்களுக்கு இவ்வேலையைக் கொடுக்க இப்பார்ப்பன அதிகாரி வி. சுப்பிரமணிய அய்யர் ஏற்பாடு செய்வதும், இதற்கு அவரது சுயநலமே காரணம் என்பதும் உண்மையா?

6. இப்பார்ப்பன அதிகாரிக்கு (Technical Line) ல் ஒரு பகுதியிலேனும் தேர்ச்சியோ, தெளிவோ அநுபவமோ, கிடையாதென்று சொல்லப்படுவது உண்மையா?

7. சர்க்கார் அச்சகத்தில் பல ஆண்டுகள் தொடர்ச்சியாக சர்க்கார் வேலைகளை நிரந்தரமாகச் செய்யும் கொருட்டு (Standard Foms) இருக்கின்றன என்பதும் அப்படிக்கொட்ட பாரங்கள் 600க்கு மேல் இப்பார்ப்பன அதிகாரி உத்திரவின் பேரில் உடைக்கப்பட்டிருக்கின்றனவென்பதும், பாரங்கள் உடைக்கப்பட்டதின் விளைவால் ரூபாய் நாற்பது ஆயிரம் ரூ. 40,000 சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டதென்பதும், இது விஷயத்தை இப்பார்ப்பன அதிகாரி இதுவரையில் சர்க்காருக்குத் தெரிவிக்காமலிருக்கிறார் என்பது, இதனுல் பொது மக்களின் பணம்வீணாகிறது என்பதும் உண்மையா?

8, வெளி அச்சகங்களுக்கு வேலைகளை எல்லாம் கொடுக்கலாமெனக் கருதிச் செய்யப்பட்ட சூழ்ச்சியும் சுமாலேயே பாரங்கள் 600ஐயும், இப்பார்ப்பன அதிகாரி உடைக்க அனுமதி தந்திருப்பதற்குக் காரணம் என்பது உண்மையா?

9. சென்னை சர்க்கார் அச்சகத்தில் வேலை பார்த்துவரும் இவ

வ. ஆ. மா. தி. மு. க. முதல் மாநாடு - ஆரணி

வெளியூர்தோழர்களுக்கு அறிவிப்பு

மாநாடு நடக்கும் ஆரணி நகருக்கு வரும் வெளியூர் தோழர்கள் விழுப்புரம் காட்பாடி மார்க்கத்தில் ஆரணி ரோட் ஸ்டேஷனில் இரங்க வேண்டும். ரயில்வே ஸ்டேஷனுக்கும் நகருக்கும் 6 மைல் தூரமிருக்கிறது. மாநாட்டுக்குவரும் தோழர்கள் சௌகர்யத்தை முன்னிட்டு, பல மோட்டார் பஸ்கள் விட ஏற்பாடுசெய்திருக்கிறது. ஆரணிக்குப் பல பக்கங்களிலிருந்தும் வருவதற்கும் மோட்டார் வசதிகள் ஏராளமாய் செய்யப்பட்டிருக்கிறது.

விழுப்புரத்திலிருந்து காட்பாடிக்கு காலை 3-55, 10-10 மாலை 4-50 காட்பாடியிலிருந்து காலை 4-30, 10-30 மாலை 4-30 எல்லா பக்கங்களுக்கும் ஆரணியிலிருந்து 30 நிமிஷத்திற்கு ஒரு பஸ் வீதம் போய்க்கொண்டிருக்கிறது. மேலும் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கே. பி. சுந்தரம்
வரவேற்புக் குழுத் தலைவர்

ஏஜெண்டு தோழர்களுக்கு அறிவிப்பு

"மாலைமணி" ஏஜண்டு தோழர்கள் தாம் அனுப்பவேண்டிய பாக்கித் தொகை பூராவையும் இம்மாத முடிவிற்குள் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறனர் அப்படி அனுப்பத் தவறும் தோழர்கட்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி மேற்கொண்டு பத்திரிகை அனுப்பப்படுவது கண்டிப்பாக நிறுத்தப்படும் என்பதைத் திட்டமாகத் தெரிவிக்கிறோம்.

மானேஜர், "மாலைமணி".

விமானத்தின் மீது கல்வீச்சு

லண்டன், ஜூன் 22—

கிராஸ்வில், ஒரு நிலைவரத் தோட்டத்தில் வேலை செய்பவர்கள் ஸ்டிரைக் செய்துவிட்டனர். அவர்கள் செய்துவந்த டி. டி. டி. ஸ்பிரே தெளிக்கும் வேலையைச் செய்ய, ஒருவர் மட்டுமே உட்கார்ந்து ஓட்டும் விமானம் உபயோகிக்கப்பட்டது. இவ்விமானம் தாழ்வாக பறக்கையில், வேலைநிறுத்தம் செய்தவர்கள் இதன்மீது கற்களை வீசி அந்த விமானம் பறக்க முடியாதபடி செய்துவிட்டனர்.

அதிகாரிகள் இங்கிலாந்து சென்று தொழிற்சாலை விஷயத்திலும், வேலைத் தன்மையிலும் பல அரிய நுட்பங்களைத் தெளிவு பெற அறிந்து நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றவர்கள் என்பதும் அச்சகத்தில் பல ஆண்டுகளாக வேலையில் அநுபவம் வாய்ந்த அதிகாரிகள் என்பதும் அவர்கள் வேலையின் நுட்பங்களைக் குறித்து சொல்லும் போது, அந்த ஆரியர் செவிசாய்க்காமல் அவைகளைப் புறக்கணித்துத் தன் சுயேச்சையாக எல்லாம் தெரிந்தவராக நடத்திக்கொண்டு வருகிறார் என்பதும் உண்மையா?

ஆர். லிங்கமுத்து
சென்னை.

பேசா மடைந்தைகளாக்கும் விசித்திர தண்டனை

லண்டன், ஜூன் 22—

சுவற்றில்கண்டபடி யாரோ ஒரு மாணவி கிறுக்கியதற்காக லங்காஷயர் கிராமர் ஸ்கூலில் படிக்கும் சுமார் 350 மாணவிகளுக்கு ஒரு நாள் முழுவதும் பேசக்கூடாது என்று மௌன தண்டனை விதிக்கப்பட்டது. அன்று முழுவதும் பள்ளியில் எந்த வேலையும் நடத்தப்படவில்லை.

தண்டனை முடிந்து வீடு திரும்பிய பெண்கள் பெற்றோர்களிடம் இதைப்பற்றி கூறினர். பள்ளி ஆசிரியையின் போக்கைக் கண்டித்து கண்டனங்கள் வர ஆரம்பித்துவிட்டன. இம்மாதிரி தண்டனைகள் விக்டோரியாவின் ஆட்சிகாலத்தில்தான் நடப்பது வழக்கமாம். பள்ளி ஆசிரியை இக்கண்டனங்களை எல்லாம்கண்டு பயந்துவிடவில்லை தான் செய்தது மிகவும் சரி என்று சொல்கிறார்.—ரூனோப்

கைரோ, ஜூன் 22—

தென் ஈராக்கில் சுத்தமான எண்ணெய் அகப்படுவது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக இங்கு செய்தி கிடைத்திருக்கிறது. இதனால் லாரூதி அரேபியாவுக்கும் எண்ணெய் வசதி கிடைக்கமுடியும்.

> தாராபுரம் தொகுதியில்
> 30—6—50 ல் நடைபெறும்
> சென்னை சட்டசபை தேர்தலில்
> ஜனராஜ்ய கட்சி அபேட்சகர்
> திரு. S. ரத்னசாமி கவுண்டருக்கு
> பச்சைப் பெட்டியில்
> தயவுசெய்து ஓட்போடவும்
> (விளம்பரம்)

> கோலார் தங்கவயல் தி. மு. கழகம்
> பொதுக்கூட்டம்
> 25—6—50-ல் நடைபெறும்
> C. P. சிற்றரசு பேசுவார்
> கிருஷ்ணகிரி தி. மு. கழகச் செயலாளர்
> K. S. R. அன்வார்கமால் தலைமைதாங்குவார்
> ஒலிபெருக்கி உண்டு
> K. S. கோபாலகிருட்டிணன், T. K. சின்னுத்துரை,
> K. இராகுலன், செயலாளர்கள். வி. செயலாளர்.

சூடானில் 'மெனஞ்னைடிஸ்'

சூடானில் சுமார் 5000 பேர்களுக்கு 'செரிப்ரோ மெனஞ்னைடிஸ்' வியாதியிருக்கிறது. ஜனத்தொகையில் 10% பேர் இதனுல் மாண்டிருப்பதாக சொல்லப்படுகிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1.